மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, கோர்ட்டி விருந்து அந்த இரண்டு பேர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆகவே, கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதுதான் அர்த்தம். மேற்கொண்டும் தகவல்கள் வேண்டுமானுல் உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், விவரம் தரப்படும்.

கதலீஸ்வரர் கோயில்

*286 வினு.—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியிலுள்ள திருக்களம்பூரில் அமைந்திருக்கும் கதலீஸ்வரர் கோயிலின் உள்சுற்றுப் பகுதியில், 'கதலி' என்று அழைக்கப்படும் வாழையினம் பல்லாண்டு காலமாகத் தாமே செழித்து வளர்ந்திருப்பதை ஆய்ந்து, பாதுகாக்க அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : திருமயம் வட்டம், திருக்களம்பூரில் உள்ள கதலீஸ்வரர் கோவிலில் கதலி வாழை மரங்கள் மனித முயற்சியின்றித் தாமாக ஏராளமாய் வளர்ந்திருப்பதாகவும், அவை அவ்வாறு வளர்ந்திருப்பது தெய்வ அம்சம் என்று உள்ளூர் மக்கள் கூறுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது. இந்த வாழை மரங்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கோவிலின் நிர்வாக அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

புலவர் பொ. பொன்னம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகளில் சிறந்த மருந்துப் பொருளாகக் கருதப் படும் கதலி வாழை இனம் மிகவும் அரிதாக திருக்களம்பூரிலுள்ள கதலீஸ்வரர் கோவிலில் தாமாக வளர்ந்திருக்கிற காரணத்தால், அந்த இனத்தைப் பாதுகாப்பதற்காக தனிப் பணியாளர் ஒருவரை நியமித்து உரிய பாதுகாப்பு அளிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, அதுசம்பந்த மாகத்தான் என்னென்ன பாதுகாப்பு முயற்சிகளையெல்லாம் விரைவிலே செய்யலாம் என்று கோவில் நிர்வாக அதிகாரிகளை ரிப்போர்ட் கேட்டிருக் கிறோம். அந்த ரிப்போர்ட் வந்தபிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைகளும் பரிசிலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டாயப் பணிக்கொடைத் திட்டம்

*287 வினு.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், தொழிற்சாலைகளில் கட்டாய கிராஜுடி திட்டத்தை அமுலாக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீல—யில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன?